## 8.16 பணியமைப்பு–வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்–மாவட்ட பேரூராட்சி அலுவலகங்களில் உள்ள பதிவறை எழுத்தர்களுக்கு வரித்தண்டலர் பணி அளித்தல்–தொடர்பாக.

ஊரக வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை 9

**கடிதம் எண் 33564/இ3/92–2.** நாள் : 27.07.1992

அனுப்புநர்

திரு அம்புஜ் சர்மா,இ.ஆப.,
அரசு இணைச் செயலாளர்

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்

ஐயா,

பொருள் :பணியமைப்பு–வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்–மாவட்ட பேரூராட்சி அலுவலகங்களில் உள்ள பதிவறை எழுத்தர்களுக்கு வரித்தண்டலர் பணி அளித்தல்–தொடர்பாக

பார்வை : தங்களது நேர்முகக் கடிதம் எண் 1870/92/பி நாள் 3.6.92

பார்வையில் காணும் தங்களது கடிதத்திற்கு கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கப்படுகிறது.

2. அரசாணை எண் 205 ஊரக வளர்ச்சித் துறை நாள் 23.3.89ல் வெளியிடப்பட்டள்ள தமிழ்நாடு பேரூராட்சி பணியாளர்கள் பணி விதிகள் 1988ன்படி வரித்தண்டலர் பணியிடத்திற்கு, தகுதியுள்ள பதிவறை எழுத்தர்களை கொண்டு நிரப்ப வேண்டும் என பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணை, வரித்தண்டலர் பணியிடங்களும் உள்ளாட்சி நிறுவனப் பணியிடங்களாக இருந்தபோது உள்ள நிலைக்கு மட்டுமே பொருந்தும். அரசாணை நிலை எண் 800 ஊரக வளர்ச்சி நாள் 16.12.88ன் மூலம் பேரூராட்சிகளில் உள்ள வரித்தண்டலர் பணியிடங்கள் அரசு நிலையாக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட அரசாணை நிலை எண் 205 ஊரக வளர்ச்சி நாள் 23.3.89ல் உள்ளவாறு பேரூராட்சிகளில் உள்ள பதிவறை எழுத்தர்களுக்கு வரித்தண்டலர்களாக பதவி உயர்வு அளிக்க இயலாது.

3. அரசாணை எண் 502 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 10.6.87ன்படி பதிவறை எழுத்தர்/ அலுவலக உதவியாளர்களை இளநிலை உதவியாளராக மட்டுமே பணியமர்த்த முடியும் என்பதால் மாவட்ட பேரூராட்சி அலுவலகங்களில் உள்ள பதிவறை எழுத்தர்களை/அலுவலக உதவியாளர்களை வரித்தண்டலராக பணியமர்த்த இயலாது.

தங்கள் உண்மையுள்ள,
ஒம்/–
அர இணைச் செயலாளர்

நகல்
பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை 108
அனைத்து மாவட்ட ஆட்சியர்.